

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.10.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் நடைபெற்ற கலைமாமணி விருது வழங்கும் விழாவில், 2021, 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் வழங்கும் நிகழ்வில், நாடக நடிகரும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவருமான பூச்சி எஸ். முருகனுக்கு கலைமாமணி விருது மற்றும் விருதிற்கான 3 சவரன் தங்கப் பதக்கம் மற்றும் விருது பட்டயத்தையும் வழங்கி சிறப்பித்தார். இந்த விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற 2025 முதலமைச்சர் கோப்பை கல்லூரி மாணவர்களுக்கான பளுதூக்குதல் விளையாட்டுப் போட்டியில் 98 கிலோ உடல் எடை பிரிவில் வீரர்கள் பளுதூக்குவதை பார்வையிட்டு, கைத்தட்டி உற்சாகப் படுத்தினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, உள்பட அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.10.2025) சென்னை நேரு விளை யாட்டரங்கில் நடைபெற்ற 2025 முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற வீராங்கனைகளிடம், பங்கேற்ற விளையாட்டுப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகளின் ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடினார். இந்நிகழ்வில் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, உள்பட அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் உடனிருந்தனர்.

### 2025 முதலமைச்சர் கோப்பை கல்லூரி மாணவர்களுக்கான

# பளுதூக்குதல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கம் - பரிசுத் தொகை - சான்றிதழ்கள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, அக்.13-

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2025 முதலமைச்சர் கோப்பை கல்லூரி மாணவர்களுக்கான பளுதூக்குதல் போட்டியில் 88 கிலோ உடல் எடை பிரிவில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கம் அணிவித்து, பரிசுத் தொகை காசோலை, சான்றிதழ் மற்றும் வீரன் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டினார்.**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.10.2025) சென்னை நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற 2025 முதலமைச்சர் கோப்பை கல்லூரி மாணவர்களுக்கான பளுதூக்குதல் போட்டியில் 88 கிலோ உடல் எடை பிரிவில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கம் அணிவித்து, பரிசுத் தொகை காசோலை, சான்றிதழ் மற்றும் வீரன் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டினார்.

தொடர்ந்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற 2025 முதலமைச்சர் கோப்பை கல்லூரி மாணவர்களுக்கான பளுதூக்குதல் விளையாட்டுப் போட்டியில் 98 கிலோ உடல் எடை பிரிவில் வீரர்கள் பளுதூக்குவதை பார்வையிட்டு, கைத்தட்டி உற்சாகப் படுத்தினார்.

மேலும், 2025 முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுடன் உணவு அருந்தினார். 2025 முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற வீராங்கனைகளிடம் விளையாட்டுப் போட்டிகளின் ஏற்பாடுகள், பங்கேற்பு குறித்து துணை முதலமைச்சர் அவர்கள் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில், முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற வீராங்கனைகள், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் தன்புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உள்பட அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் உடனிருந்தனர்.



தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் கொள்முதல் பணிகள் குறித்து அமைச்சர் அர.சக்கரபாணி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். சத்ய பிரதா சாகு, முனைவர் அண்ணாதுரை, மாவட்ட ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம், ச.முரசொலி எம்.பி, ஒரத்தநாடு முன்னாள் எம்.எல்.ஏ., எம்.இராமச்சந்திரன், நெ.செல்வம் மற்றும் பலர் உடன் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.10.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் நடைபெற்ற கலைமாமணி விருது வழங்கும் விழாவில், 2021, 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் வழங்கும் நிகழ்வில், திரைப்பட நடிகை செல்வி சாய் பல்லவி அவர்களுக்கு கலைமாமணி விருது மற்றும் விருதிற்கான 3 சவரன் தங்கப் பதக்கம் மற்றும் விருது பட்டயத்தையும் வழங்கி சிறப்பித்தார். இந்த விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில்,

# 10 பேட்டரி வாகனங்கள் மாநகராட்சிக்கு வழங்கல்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கொடி அசைத்து தொடங்கி வைத்தார்!

*திருவண்ணாமலை, அக். 13 -*

திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில், 10 பேட்டரி வாகனங்களை, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு மாநகராட்சிக்கு வழங்கினார்.

பின்னர், மாட வீதியில் நடைபெறும் தூய்மைப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்காணோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர். கிரிவலப் பாதையில் உள்ள 20 குளங்களை தூய்மை அருணை அமைப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் சீரமைப்பது என தீர்மானிக்கப் பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

இதனைத் தொடர்ந்து, தூய்மை அருணை அமைப்பும், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் இணைந்து, கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி மாதந்தோறும் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு, அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஜுலை 16 அன்று தொடங்கி வைத்தார்கள். இது மாதந்தோறும் நடைபெற்று வருகிறது.

12.10.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.00மணிக்கு, திருவண்ணாமலை, அண்ணாமலையார் திருக்கோயில் எதிரில், தூய்மை அருணை சார்பில், 10 பேட்டரி வாகனங்கள் தூய்மை பணிக்காக மாநகராட்சிக்கு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பொதுப்பணித் துறை அமைச்சரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ.வேலு கொடியசைத்து தொடங்கி வைத்து, பேட்டரி வாகனங்களை மாநகராட்சிக்கு வழங்கினார்.

பின்னர், காலை 8.00 மணிக்கு, வார்டு16, தேரடி வீதியில் நடைபெறும் தூய்மை பணிகளையும், காந்தி சிலை அருகில் வார்டு எண்13 சார்பில் நடைபெறும் தூய்மை பணியையும், வார்டு 7 பேகோபுரத் தெருவில் நடைபெறும் தூய்மைப் பணியையும்,

வார்டு14 பேகோபுரத் தெரு சக்தி திரையரங்கம் அருகில் நடைபெறும் தூய்மை பணியையும், பின்னர் வார்டு15, திருவூடல் தெருவில் நடைபெறும் தூய்மை பணியையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, ஆலோசனைகளை வழங்கினார். பின்னர், திருமஞ்சன கோபுரத் தெருவில் தூய்மை காவலர்களுடன் தேநீர் அருந்தினார்.

நிகழ்ச்சியில் தூய்மைப் பணியில் தூய்மை அருணையின் மேற்பார்வையாளர்கள் டாக்டர் எ.வ.வே. கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா ப.விஜயரங்கன், மேயர் நிர்மலா வேல்மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம், இல. குணசேகரன், ஆணையாளர் செல்வபாலாஜி, பொதுப்பணித்துறையின் கோட்டப் பொறியாளர்கள் முரளி, ஞானவேல்,

ஒருங்கிணைப்பாளர்கள் அ.கோவிந்தன், செ. எழில்மாறன், எஸ்.கண்ணதாசன், ஏ.ஏ.ஆறுமுகம், ம.வினோத்குமார், எஸ். கே.டி.வீரா, வழக்கறிஞர்கள் ம.செந்தில், கிருஷ்ணமூர்த்தி, பா.அரிகிருஷ்ணன், வழக்கறிஞர் ந.சீனுவாசன், இரா.அருண், மெட்ராஸ்கே.சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கே.காளிதாஸ், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர்.நாகராஜ், கு.குமார், மண்டி.பிரகாஷ், மு.கருணாமூர்த்தி, இரா.ராஜாமணி, அ.திவாகர், அ. பழனி, கே.பிரகாஷ், பி.ஜி.முருகன், கோபி.சங்கர், சென்னை. சுரேஷ், முபாரக், லயன். ஷெரீப். கா.ஏழுமலை, எஸ்.ஜாகீர், இரா.ஜோதி, கு.தியாகு, மூ.காமேஷ், ஹக்கிம்சேட், சி.கே.சசிக்குமார், கோல்டு.எஸ்.பிரபு மற்றும் மாட வீதி ஒருங்கிணைப்பாளர்கள் அருணை வெங்கட், சினம்.பெருமாள், ஆர்.கே.பி.பாஸ்கர், ஜீவரேகாவிஜயராஜ் உட்பட ஆயிரக்கணக்கான தூய்மைக் காவலர்களும் கலந்து கொண்டனர்.

# கோவை 45வது வார்டில் புதிய திட்டப் பணிகள்!

## மேயர் ரெங்கநாயகி ராமச்சந்திரன் துவக்கி வைத்தார்!

*கோவை, அக். 13-*

கோவை மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண் 45க்குட்பட்ட கே.கே.புதூர் பகுதியில் 15வது மாநில நிதியின் கீழ் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில்நகர்நல நல்வாழ்வு மையம் கட்டும் பணி, வார்டு எண் 33க்குட்பட்ட கவுண்டம் பாளையம்பகுதியில்15வது மாநில நிதியின் கீழ் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டநகர்நல நல்வாழ்வு (UPHC) மையத் கட்டிடத்தை திறந்து வைத்து, வார்டு எண் 37க்குட்பட்ட வடவள்ளி பேருந்து நிலையத்தில் ரூ.65.00லட்சம்மதிப்பீட்டில் மகளிர்க்கான பிரத்தியேக சிறப்பு கழிப்பிடம் கட்டும் பணி, வார்டு எண் 38க்குட்பட்ட மீனாட்சி நகர் IOB குடியிருப்பு பகுதியில்இயக்குதல்மற்றும் பராமரிப்பு நிதியின் கீழ் ரூ.97.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப் பட்டுள்ளபுதியதரைமட்ட பாலத்தினை மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் முன்னிலையில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இதில் மேற்கு மண்டல தலைவர் தெய்வானை தமிழ்மறை, தலைமை பொறியாளர் விஜயகுமார், உதவி ஆணையர் துரை முருகன், மாநகர துணை தலைமை பொறி யாளர் இளங்கோவன், உதவி செயற்பொறியாளர்சவீதா, மண்டலசுகாதாரஅலுவலர் வீரன், உதவி பொறியாளர்கள்விமலா,ஹரிபிரசாத் மற்றும் கழக நிர்வாகிகள், மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், அணவயல் ஊராட்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில், அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில், அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.